# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 133/மா/2023**
**நாள் : 09.10.2023**

திரு. G. தேவா,
வடபழனி, சென்னை – 26. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–8, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, வடபழனி, கருமாரி அம்மன் கோயில் தெரு, எண்.1, பிளாசா மேனர் பிளாட், C-50 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G. தேவா என்பவரின் 24.04.2023 நாளிட்ட மனு 26.04.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 133/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, வடபழனி, கருமாரி அம்மன் கோயில் தெரு, எண்.1, பிளாசா மேனர் பிளாட், C-50 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G. தேவா என்பவரின் முறையீட்டு மனுவில்,

"நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கதவு எண்.109, மேற்கு பெரியார் பாதை, அரும்பாக்கம், சென்னை – 600 106 என்கின்ற முகவரியில் திரு. பூங்காவனம் என்பவர் தரைதளம், முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளத்தில் A.C. Sheet-உடன் கட்டிடம் கட்டி உள்ளார். கட்டிடத்தின் பின் பகுதியை காவாங்கரை கிளை கால்வாயை ஆக்கிரமித்தும் கட்டி உள்ளார்.

இது சம்மந்தமாக, தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் கடந்த 28.06.2017 அன்று பொது தகவல் அலுவலர்/செயற் பொறியாளர், மண்டலம்-8 அவர்களுக்கு விண்ணப்பித்து இருந்தேன். பொது தகவல் அலுவலர் அவர்கள் 12.10.2017 அன்று அனுப்பிய ம.அ.8.ந.க.எண்.அ4/5294/2017 கடிதத்தில் சரியான தகவல் வழங்காததால், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் இரண்டாம்

மேல்முறையீடு செய்தேன். வழக்கு எண்.SA 7802/விசாரணை/c/2017. 7 நாட்களுக்குள் எனக்கு தகவல் வழங்குமாறு மாநில தகவல் ஆணையர் தீர்ப்பளித்தார். அதன்படி எனக்கு மேற்படி விதிமீறல் கட்டிடத்திற்கு வழங்கிய Stop Work Notice மற்றும் Locking & Sealing Notice பதிவு தபாலில் அனுப்பி வைத்தார்கள்.

மேற்கண்ட விதிமீறல் கட்டிடத்தை முழுமையாக Locking & Sealing செய்யாமல் இரண்டாம் தளத்தை மட்டும் Locking & Sealing செய்துவிட்டு, படிகட்டுக்கு மேற்புறத்தில் Notice ஒட்டிவிட்டு சென்றார்கள். இது சம்பந்தமாக தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் 09.08.2021 அன்று சில தகவல்கள் கேட்டிருந்தேன். அதில் மேற்கண்ட முகவரியில் உள்ள விதிமுறை மீறிய கட்டிடத்தின் சில தளங்கள் தவிர மற்ற தளங்கள் Locking & Sealing செய்யவில்லை. அதற்கான தகவலை வழங்கவும் என்று கேட்டிருந்தேன். பொது தகவல் அலுவலர், மண்டலம்-8 அவர்கள் 16.09.2021 அன்று அனுப்பிய ம.அ.08.ந.க.எண்.அ4/4822/2021 கடிதத்தில் சரியான தகவல் வழங்கவில்லை. பிறகு 13.07.2020 அன்று செயற் பொறியாளர், மண்டலம்-8, அவர்களுக்கு மனு அனுப்பி இருந்தேன். அதில் மேற்கண்ட விதிமீறல் கட்டிடத்திற்கு 04.04.2019 அன்று Locking & Sealing Notice கொடுத்துவிட்டு 15 மாதங்கள் கடந்தும் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் 20.01.2020 அன்று எனது வக்கீல் அனுப்பிய Legal Notice மீதும் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், ஆகையால் செயற் பொறியாளர், உதவி செயற் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் முறையிட உள்ளேன் என்று அந்த மனுவில் குறிப்பிட்டு இருந்தேன். அதற்கு பின்பும் இன்று வரை மற்ற தளங்களை Locking & Sealing செய்யவில்லை.

மேற்கண்ட விதிமீறல் கட்டிடத்திற்கு சொத்து வரி சம்மந்தமாக சில தகவல்களை தகவல் பெறும் உரிமைச்சட்டத்தில் 14.10.2017 அன்று பொது தகவல் அலுவலர்/உதவி வருவாய் அலுவலர் அவர்களிடம் விண்ணப்பித்து இருந்தேன். அரையாண்டிற்கு ரூ.7035/- வசூலிக்கப்படுகிறது என்று தகவல் வழங்கி இருந்தார். காவாங்கரை கிளை கால்வாயை ஆக்கிரமித்து கட்டிய கட்டிடத்திற்கு சென்னை மாநகராட்சி வரி வசூல் செய்கிறது.

மேற்கண்ட விதிமீறல் கட்டிடத்திற்கு எந்த ஆண்டு முதல் கழிவு நீர் இணைப்பு கொடுக்கப்பட்டது என்று தகவல் பெறும் உரிமைச்சட்டத்தில் பொது தகவல் அலுவலர்/பகுதி பொறியாளர் VIII/P-10CMWSSB அவர்களிடம் சில தகவல்கள் கேட்டு விண்ணப்பித்து இருந்தேன். அதற்கு பொது தகவல் அலுவலர்கள் அரும்பாக்கத்திலுள்ள மேற்கு பெரியார் பாதை என்ற தெருவில் பிரதான கழிவுநீர் குழாய்கள் அமைப்பு இல்லாததால் வீட்டு எண்.109, மேற்கு பெரியார் பாதை, அரும்பாக்கம், சென்னை – 600 106 என்ற வீட்டிற்கு கழிவுநீர் மற்றும் குடிநீர் இணைப்பு வழங்கப்படவில்லை என்று தகவல் வழங்கி இருந்தார். மேற்கண்ட விதிமீறல் கட்டிடத்தின் கழிவுநீர் பின்புறம் ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள மழைநீர் வடிகால் கால்வாயில் கலக்கும்படி கட்டிடத்தின் உரிமையாளர் பூங்காவனம் இணைப்பு கொடுத்துள்ளார்.

மேற்கண்ட விதிமீறல் கட்டிடம், மழைநீர் வடிகால் ஒடையை எத்தனை அடி ஆக்கிரமித்து வீடு கட்டப்பட்டுள்ளது என்று பொது தகவல் அலுவலர்/தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அமைந்தகரை வட்டம் அவர்களிடம் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் 28.06.2017 அன்று விண்ணப்பித்து இருந்தேன். அதற்கு பொது தகவல் அலுவலர் மற்றும் துணை வட்டாட்சியர் (நிர்வாகம்) அவர்கள் மனுவில் நான் கோரிய விபரங்கள் தொடர்பாக மண்டல அலுவலகங்களில் பராமரிக்கப்படுவதால் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(3)(ii)ன் கீழ் பொது தகவல் அலுவலர்/செயற் பொறியாளர், மண்டலம்-8 பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று தகவல் வழங்கி இருந்தார்கள்.

04.04.2019 அன்று Locking & Sealing Notice விதிமீறல் கட்டிடத்திற்கு கொடுத்துவிட்டு பேருக்கு ஒரே ஒரு தளத்தை மட்டும் Locking & Sealing செய்துவிட்டு மொத்த கட்டிடத்தையும் Locking & Sealing செய்ததாக Notice ஒட்டி அதை புகைப்படம் எடுத்துவைத்துக் கொண்டு விசாரணைக்கு அழைத்தால் அதை காண்பித்து தப்பிவிடலாம் என்று பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-8ன் செயற்பொறியாளர், Unit-22ன் உதவி செயற் பொறியாளர் மற்றும் 105வது கோட்டத்தின் உதவிப் பொறியாளர் ஆகியோர் செயல்படுகிறார்கள். இந்த விதிமீறல் கட்டிடம் சம்மந்தமாக மெட்ராஸ் உயர்நீதி மன்றத்தில் வழக்கும் தொடர்ந்துள்ளேன். வழக்கு எண்.W.P. No.1667/2021 வழக்கு நிலுவையில் உள்ளது.

பட்டா இடத்தில் கட்டிய கட்டிடத்தில் சிறிய விதிமீறல் இருந்தாலும், புகைப்படகாரர்கள், செய்தி தாள் நிருபர்கள் புடைசூழ சென்று புகைப்படத்திற்கு போஸ் கொடுத்துக்கொண்டு Lock & Seal வைக்கும் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் அனுமதியை வாங்காமல், பாதி கட்டிடத்தை காவாங்கரை கிளை கால்வாயில் கட்டிய கட்டிடத்தை கையூட்டு பெற்றுக்கொண்டு அமலாக்க நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார்கள் மண்டலம்-8ன் பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள்.

ஆகையால் ஐயா அவர்கள், மேற்கண்ட எனது புகார் மனு மீது விசாரணை நடத்தி விதிமீறல் கட்டிடத்தை முழுவதுமாக Lock & Seal செய்யாத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -8ன் செயற் பொறியாளர், Unit 22ன் உதவி செயற் பொறியாளர் மற்றும் 105வது கோட்டத்தின் உதவிப் பொறியாளர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**3) இம்மனு தொடர்பாக முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 29.9.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 26.9.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**முறையீட்டு மனுதாரர் 29.9.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.**

"சென்னை, அரும்பாக்கம், மேற்கு பெரியார் பாதை, கதவு எண் 109ல் வசிக்கும் திரு. பூங்காவனம் என்பவர் காவாங்கரை கிளை கால்வாயை ஆக்கிரமித்து தரைதளம், முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் கூடிய அடுக்குமாடி கட்டடம்

கட்டியுள்ளார். விதிகளை மீறி கட்டப்பட்டுள்ள மேற்கண்ட கட்டடத்தின் மீது தேவையான நடவடிக்கை எடுக்கும்படி மாநகராட்சியில் புகார் மனு அளிக்கப்பட்டது. மாநகராட்சியினர் மேற்கண்ட விதிமீறல் கட்டடத்தின் மீது முழுமையாக நடவடிக்கை எடுக்காமல் இரண்டாம் தளத்தில் இயங்கும் உடற்பயிற்சி மையத்திற்கு மட்டும் Lock and seal செய்துள்ளனர். மற்ற தரை தளம், இரண்டு மற்றும் மூன்றாம் தளங்களை Lock and seal செய்யவில்லை. மேற்கண்ட திரு. பூங்காவனம் கால்வாயை ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டடத்தின் மீது முழு நடவடிக்கை எடுத்திடக் கோரியபோது, திரு. பூங்காவனம் அவர்கள் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறைக்கு கட்டட வரன்முறை குறித்து மனு அளித்துள்ளதாகவும், அது தற்போது நிலுவையில் உள்ளதால், மேற்கண்ட கட்டடத்தின் மீது தற்போது நடவடிக்கை எடுக்க இயலாது என தெரிவித்துள்ளனர். என்னால் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் (W P No. 1667 of 2021) மீதான 1.8.2023 நாளிட்ட தீர்ப்பில், தமிழ்நாடு நகரமைப்பு சட்டத்தின் கீழ் 8 வார காலத்திற்குள் மாநகராட்சியால் மனுதாரரின் மனுவினை விசாரித்து முடிக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, விதிகளை மீறி, கால்வாயை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள கட்டடத்தை முழுவதுமாக Lock and Seal செய்திட தேவையான நடவடிக்கை எடுக்கும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எனது 24.4.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம்-8, உதவிப் பொறியாளர் 29.09.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.**

"மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள சென்னை அரும்பாக்கம் மேற்கு பெரியார் பாதை, கதவு எண் 109ல் உள்ள திரு. பூங்காவனம் என்பவருக்கு சொந்தமான வீடு, விதிகளை மீறி கட்டப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, மேற்கண்ட கட்டடத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, அக்கட்டடத்தின் இரண்டாம் தளத்திற்கு Lock and Seal செய்யப்பட்டது. மேலும், முழு கட்டடத்தையும் சீல் வைத்திட மாநகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது, அக்கட்டடத்தின் உரிமையாளர் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலாளருக்கு மேல் முறையீடு செய்துள்ளார். மேலும், இந்நேர்வு தொடர்பாக மேற்கண்ட திரு. பூங்காவனம் அவர்களால் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் (W P No. 25475 of 2023 and WMP Nos. 24870 and 24873 of 2023) மீதான 29.8.2023 நாளிட்ட தீர்ப்பில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைக்கு மனுதாரர் திரு. பூங்காவனம் என்பவரால் அளிக்கப்பட்ட சிறப்பு

சீராய்வு மனுவின் மீது Town and Country Planning Act பிரிவின்படி 8 வார காலத்திற்குள் நடவடிக்கை எடுத்து முடிக்குமாறும், அதுவரை கட்டாய நடவடிக்கையை (Coercive steps) தொடராதிருக்க அறிவுறுத்தியுள்ளது என்பதை தெரிவித்து மேற்கண்ட வழக்கின் மீதான தீர்ப்புரையின் நகலினை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

**முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-8ன் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பிளாசா மேனர், பிளாட் சி 50 கருமாரி அம்மன் கோவில் தெருவில், வசிக்கும் திரு.G. தேவா தன்னுடைய மனுவில், சென்னை அரும்பாக்கம், மேற்கு பெரியார் பாதை, கதவு எண்.109ல் வசிக்கும் திரு. பூங்காவனம் என்பவர் சாவாங்கரை கிளை கால்வாயை ஆக்கிரமித்து தரைதளம், முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளத்துடன் கூடிய அடுக்கமாடி கட்டிடத்தை, விதிகளை மீறி கட்டியுள்ளார் எனவும், இது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8ல் புகார் மனு அளித்தும் நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8ன் அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள விதிமீறி கட்டிய கட்டடத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, அக்கட்டடத்தின் இரண்டாம் தளத்திற்கு Lock and Seal செய்யப்பட்டது என்றும், முழு கட்டடத்தையும் சீல்வைத்திட மாநகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது, அக்கட்டடத்தின் உரிமையாளர் திரு. பூங்காவனம், தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறையின் செயலாளருக்கு மேல்முறையீடு செய்துள்ளார் என்பதும், மேலும் வீட்டின் உரிமையாளர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண். W.P.No.25475 of 2023 மற்றும் WMP Nos. 24870 மற்றும் 24873 of 2023 தொடர்ந்து, அவ்வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 29.8.23 நாளிட்ட தீர்ப்பில், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறைக்கு மனுதாரர் திரு. பூங்காவனம் சமர்ப்பித்த சிறப்பு சீராய்வு மனுவின் மீது Town and Country Planning Act பிரிவின்படி 8 வார காலத்திற்குள் நடவடிக்கை எடுத்து முடிக்குமாறும், அதுவரை கட்டாய நடவடிக்கையை (coercive steps) தொடராதிருக்க அறிவுறுத்தியுள்ளது என்றும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8ன் உதவிப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில், சென்னை, அரும்பாக்கம் மேற்கு பெரியார் பாதை, கதவு எண்.109ல் விதிகளை மீறி கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பின் உரிமையாளர் திரு. A. பூங்காவனம் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண்.W.P.No.25475 of 2023 மற்றும் WMP Nos. 24870 மற்றும் 24873 of 2023ல் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 29.8.2023 நாளிட்ட தீர்ப்பில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறைக்கு திரு. பூங்காவனம் சமர்ப்பித்த சிறப்பு சீராய்வு மனுவின் மீது Town and Country Planning Act பிரிவின்படி 8 வார காலத்திற்குள் நடவடிக்கை எடுத்து முடிக்குமாறும், அதுவரை கட்டாய நடவடிக்கையை (coercive steps) தொடராதிருக்க அறிவுறுத்தியுள்ள நிலையில், முறையீட்டு மனுதாரர் திரு. G. தேவா அவர்கள்

இம்முறைமன்றத்தில் சமர்ப்பித்துள்ள புகார் மனு தொடர்பான பொருட்பாடு குறித்து மாண்பமை உயர்நீதிமன்றம் 29.8.23 நாளிட்ட தீர்ப்புரை நடைமுறையில் உள்ள நிலையில், நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள பொருட்பாடுகள் எதனையும், 2014–ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10 (3)ன்படி, இம்முறைமன்றத்தால் விசாரணை செய்ய இயலாது என்பதால், இந்நேர்வு தொடர்பான நடவடிக்கையை இத்துடன் முடித்துவைக்கலாம் என இம்முறைமன்றம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 9-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. G. தேவா,
   C-50, பிளாசா மேனர் பிளாட்,
   எண்.1, கருமாரி அம்மன் கோயில் தெரு,
   வடபழனி, சென்னை – 600 026.
2. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. மண்டல அலுவலர்,
   மண்டலம் - 8, பெருநகர சென்னை மாநகராட்சி,
   368, புல்லா அவின்யூ, செனாய் நகர், சென்னை – 30.
4. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை,
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல் : மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்